FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173 BNSS
BNSS பிரி 24 173-ன் கீழ்

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8167241

06/AC/2025

1. District : மாவட்டம் கரூர் PS: இனா.தா.கா.பிரி 24 காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 06.12.2025

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION ACT 1988 [AS AMENDED IN 2018] Sections பிரிவுகள்: 7[b]
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence-Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 05.12.2025 Date to : நாள் வரை காலை சுமார் 10.30 மணி
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.12.2025 Time : நேரம் காலை 06.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.12.2025 Time : நேரம் காலை 07.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமான புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 25 கி.மீ. கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மகாதானபுரம் வடக்கு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. சதீஷ்குமார் (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் வெங்கிடராஜ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1989 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கொத்தனார் (g) Address : முகவரி செட்டியார் தெரு, மேட்டுமகாதானபுரம் கிருஷ்ணராயபுரம் வட்டம். கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பிரபு. மகாதானபுரம் வடக்கு கிராம நிர்வாக அலுவலர். கிருஷ்ணராயபுரம் வட்டம். கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தரப்பட்டுள்ளது

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

6.12.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

6/12/25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.12.2025 AT. 10.00 HRS.

Name: பெயர் க. அமிதோதன்

Rank: நிலை ..... No. எண் .....

ஆய்வாளர். மு.த.க. பிரிவு
கடலூர்.

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.06/AC/2025 u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் K.சாமிநாதன் ஆகிய நான் 06.12.2025 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது S.சதீஷ்குமார், த/பெ.செல்வராஜ், செட்டியார் தெரு, மேட்டுமகாதானபுரம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் - S.சதீஷ்குமார், த/பெ.செல்வராஜ், செட்டியார் தெரு, மேட்டுமகாதானபுரம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம. பெறுநர் - காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கரூர் மாவட்டம். ஐயா, நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மேட்டுமகாதானபுரத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். நான் பிளஸ் டூ வரை படித்துள்ளேன். எனக்கு திருமணமாகிவிட்டது. என்னுடைய அண்ணன் சரவணன் இறந்துவிட்டார். எனது அம்மா வீரம்மாள் 18.4.2018 ஆம் தேதி இறந்துவிட்டார். எனது அப்பா செல்வராஜ் 3.9.2025 ஆம் தேதி இறந்துவிட்டார். என் அப்பா இறந்த பின்னர் தமிழ்நாடு அரசு உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் ரூ.22500/- வழங்குமாறு கடந்த 29.10.2025 ஆம் தேதியன்று கிருஷ்ணராயபுரம் தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்தேன். அந்த மனு தொடர்பாக மகாதானபுரம் வடக்கு விஏஓ திரு.பிரபு அவர்கள் என்னிடம் விசாரித்தார். மேலும் எனது தந்தை பெயருக்கு நான் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று வாங்கிவிட்டேன். ஆனால் எனது தாயாருக்கு மட்டும் வாரிசு சான்று வாங்கவில்லை. எனவே நான் 30.11.2025 அன்று எனது அம்மாவின் பெயரில் வாரிசு சான்று வேண்டி ரூ.60 கட்டணம் செலுத்தி ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்தேன். அந்த விண்ணப்பத்தின் எண்.TN-7202 5113 0336 ஆகும். இந்நிலையில், கடந்த 3.12.2025 அன்று மத்தியானம் சுமார் 12.15 மணிக்கு 99765 13929 என்ற எண்ணிலிருந்து என்னுடைய செல்போன் எண் 96264 94008-க்கு என்னைக்கூப்பிட்டு, மகாதானபுரம் வடக்கு கிராம விஏஓ பிரபு பேசுவதாகவும், உன் அம்மாவின் பெயரில் வாரிசு சான்று தொடர்பான ஆவணங்களுடன் 5.12.2025 அன்று காலையில் தனது அலுவலகத்திற்கு நேரில் வந்து பார்க்குமாறும் சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். அதன்படி நான் நேற்று 5.12.2025 காலை சுமார் 10.30 மணிக்கு மகாதானபுரம் வடக்கு கிராம விஏஓ திரு.பிரபு அவர்களை ஆபிஸில் நேரடியாக சந்தித்து, எனது அம்மாவின் பெயரில் வாரிசு சான்று வேண்டி விண்ணப்பம் தொடர்பாக கேட்டபோது, அதற்கு அவர் ஆமாமா உங்க மனுவை என்னுடைய ஆர்.ஐ அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்பிவிட்டேன். அதனால் எனக்கு தனியாக

ரூ.5000/- ரூபாய் பணம் கொடுத்தீங்கனா, ஆர்.ஐ-கிட்ட சொல்லி உங்களுக்கு வாரிசு சான்று உடனே கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று என்னிடம் சொன்னார். அதற்கு நான் கூலி வேலைக்கு செல்வதால் என்னால் அவ்வளவு பணம் புரட்டமுடியாது என்று அவரிடம் சொன்னேன். அப்போது விஏஒ பிரபு அவர்களின் அருகிலிருந்த அவரது உதவியாளர் திரு.குமார் என்பவர் என்னிடம், ஏய்யா வீணா அலைஞ்சிட்டிருக்க, விஏஒ கேட்கும் பணத்தை கொடுத்து உன் வேலையை முடித்துக்கொள் என்று சொன்னார். நான் மீண்டும் விஏஒ பிரபு அவர்களிடம் என்னுடைய நிலைமையைச் சொல்லி அவ்வளவு பணம் என்னால் கொடுக்கமுடியாது என்றேன். அப்போது அவர் உனக்காக ரூ.2000/- குறைத்துக்கொள்கிறேன். நாளை 6.12.2025 அன்று காலை ரூ.3000/- பணத்தை கொடுத்தால் மட்டுமே உன் அம்மா பெயரில் வாரிசு சான்றும், உன் அப்பா பெயரில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் ஈமச்சடங்கு நிதி உதவியும் வாங்க முடியும் என்று கண்டிப்பாக சொல்லி அனுப்பிவிட்டார். அரசு இலவசமாக வழங்கும் சேவையை பெறுவதற்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.3000/- லஞ்சம் கேட்கும் மகாதானபுரம் வடக்கு கிராம விஏஒ திரு.பிரபு மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நான் வாரிசு சான்று வேண்டி ஆன்லைன்மூலம் விண்ணப்பித்த ஒப்புகைச்சீட்டு நகல், என் அம்மாவின் இறப்புச்சான்று ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும் திரு.பிரபு கேட்ட லஞ்சப்பணம் ரூ.3000/-ஐ கொண்டுவந்துள்ளேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (S.சதீஷ்குமார்) 6/12/2025.

Sir, Received the complaint on 6.12.2025 at about 06.30 hrs,.A Confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and the reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.06/AC/2025 u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at 07.00 hrs on 06.12.2025. Sd/-(xxxxxxxx) 06.12.2025. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original written complaint of Tr.S.Sathishkumar S/o.Selvaraj, Chettiyar Street, Mettumahadhanapuram, Krishnarayapuram Taluk, Karur District are submitted to the Hon'ble Principal District and Sessions Judge / Special Court, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

6/12/2025

(K.Saminathan)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.